பக்கங்கள்: ஆறு

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு2026 ஆனி32 ஞாயிற்றுக்கிழமை(16-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்233

★ வட்டுக்கோட்டை ★ அராலி ★ சங்கானை
★ சண்டிலிப்பாய் ★ மாகியப்பிட்டி ★ தொட்டிலடி

# முன்னேறிய பலபகுதிகளில் இருந்து இராணுவம் துரத்தியடிக்கப்பட்டது!

## யாழ். தாக்குதல்களின் பின்னணியில் இந்தியா

### கோபாலசாமி குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 16

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா அரச படையினர் மேற்கொண்டுள்ள இராணுவத் தாக்குதல்களின் பின்னணியில் இந்திய அரசு இருப்பதாக சந்தேகப் படுவதாக மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இந்த சந்தேகத்தை நேற்று முன்தினம் சென்னையில் இலங்கைத் தூதரகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டத்திலே சுட்டிக் காட்டியிருக்கிறோம் என்றும் கோபாலசாமி தெரிவித்தார். [இ-4]

## சுன்னாகத்தில் நேற்று ஷெல்லுக்கு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 16

வலிகாமம் வடக்கு பகுதி மீது நேற்றும் பரவலாக கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று படையினர் மேற்கொண்ட ஷெல்தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களின் போது ஒருவர் உயிரிழந்தார், மூவர் காயமடைந்தனர்.

தமது வீடுகளிலிருந்து பொருள்களை மீட்டுவரச் சென்றவர்களே பெரும்பாலும் இத்தாக்குதல்களில் சிக்குண்டனர்.

சுன்னாகத்தில் விழுந்த ஷெல்லினால் சுன்னாகம் கத்தோலிக்க தேவாலயப் பகுதியில் இரத்தினம் இராசேந்திரம் [வயது 26] என்பவர் மரணமானார்.

[5ஆம் பக்கம் பார்க்க]

## பல வெளிநாடுகளில் கண்டனப் பேரணிகள்

கொழும்பு, ஜூலை 16

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா அரசு நடத்தும் படுகொலைகளைக் கண்டித்து அவுஸ்திரேலியா, நோர்வே, சுவீடன், பிரிட்டன் போன்ற நாடுகளின் தலைநகர்களில் நேற்றும் நேற்று முன்தினமும் கண்டனப் பேரணிகளை தமிழ் மக்கள் நடத்தியுள்ளனர்

தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து பேரணியில் சென்றோர் கோஷங்களை எழுப்பினர்.

அரசின் இப் படுகொலை

(2 ஆம் பக்கம் பார்க்க]

## பாப்பரசர் கவலை

வத்திக்கான், ஜூலை 16

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களை படுகொலை செய்வதை ஸ்ரீலங்கா அரசு உடனடியாக நிறுத்த வேண்டுமென உலக கத்தோலிக்கர்களின் தலைவர் புனித திருத்தந்தை அருளப்பர் சின்னப்பர் கேட்டுள்ளார்.

"புலிகளின் குரல்" வானொலி இத்தகவலை வெளியிட்டது.

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கானில் தனது தினசரி பிரசங்கம் ஒன்றில் அரசு தமிழ் மக்களை கொன்றொழிப்பதை நிறுத்த வேண்டுமெனவும் —

யாழ்ப்பாணத்தில் தேவாலயம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் தமிழ்மக்கள் கொல்லப்படுவது குறித்து தான் வருந்துவதாகவும் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட படுகொலை தொடர்பாக கத்தோலிக்க ஆயர்களும் கண்டனம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## "புலிப்பாய்ச்சல்" தாக்குதலால் நிலை குலைந்து ஓடித்தப்பியது

யாழ்ப்பாணம், ஜூலை 16

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை மூலம் முன்னேறிய ஸ்ரீலங்காப் படைகள் மீது நேற்று முன்தினமும் நேற்றும் விடுதலைப் புலிகள் திரத்துடன் நடத்திய "புலிப் பாய்ச்சல்" தாக்குதல் நடவடிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாது நிலைகுலைந்த ஸ்ரீலங்காப் படைகள் முன்னேறிய பகுதிகளிலிருந்து நேற்று ஓடித் தப்பினர்.

இதனையடுத்து அராலி, வட்டுக்கோட்டைச் சந்தி, சங்கானை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, தொட்டிலடி, சிரணிச் சந்தி முதலிய பகுதிகள் முற்றாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தன.

படையினர் முன்னேறிய ஏனைய பகுதிகளில் இருந்தும் அவர்கள் வாபஸாகியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. ஆனால் இச்செய்தி எழுதப்படும் வரை அப்பிரதேசங்களை சோதித்து, துப்புரவு செய்து கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பணி பூர்த்தியாகாததால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

[6ஆம் பக்கம் பார்க்க]

## முன்னேறிப் பாயும் நடவடிக்கைக்கு "புலிப்பாய்ச்சல்" மூலம் பதிலடி

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை மூலம் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளில் முன்னேறிய இராணுவத்தினரை விரட்டியடிப்பதற்காக நேற்று முன்தினம் அதிகாலை அளவெட்டியில் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் நடவடிக்கைக்கு "புலிப்பாய்ச்சல்" என்று தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பெயர் சூட்டினார்.

தலைவரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

'புலிப் பாய்ச்சல் முதல் நடவடிக்கையிலேயே — நேற்று முன்தினம் காலையில்—படையினர் முன்னேறிய பல பிரதே

(5 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் வேறு பகுதிகளில் படையினர் தாக்குதல் ஆரம்பிக்கலாம்

"புலிப்பாய்ச்சல்" நடவடிக்கையை அடுத்து பின்வாங்கி பலாலி முகாம் நோக்கி நகரும் ஸ்ரீலங்காத் துருப்புகள் மீண்டும் குடாநாட்டில் வேறு பகுதிகளில் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகக் கொண்டு வரப்பட்ட — 4 பிரிகேட்டுகளைச் (படையணிகளைச்) சேர்ந்த—

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாகினி வானொலி "கப்சிப்"

பெருத்த ஆரவார ஏற்பாடுகளுடன் ஸ்ரீலங்கா படைகள் ஆரம்பித்த "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையின் மேலதிக விவரங்களை ரூபவாஹினி, இலங்கை வானொலி போன்றவை நேற்று பெரும்பாலும் வெளியிடவில்லை. அவை மௌனம் சாதித்தது குறிப்பிடத்தக்கது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக செல்லாதீர்!

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களுக்கு தாம் அறிவிக்கும் வரை பொது மக்கள் செல்ல வேண்டாம் என்று விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

படையினர்தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து பின்வாங்கிச் சென்ற சமயம் அப்பிரதேசங்களில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் மற்றும்வாகன வெடிகளை விட்டுச் சென்றிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இவற்றை துப்புரவு செய்யும் பணி முடிவடைந்த பின்பே பொதுமக்கள் அப்பிரதேசங்களுக்குச் செல்ல முடியும் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

## செஞ்சிலுவைச் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி சீ.ஈ உயர்தரப் பரீட்சையை அகில இலங்கை ரீதியில் பின்போடுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பான கடிதம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

தற்போது யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையால் மாணவர்கள் பலரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

குறிப்பேடுகளை தவறவிட்ட நிலையில் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை நிலையங்கள் அமைய உள்ள பாடசாலைகள் அனைத்தும் அகதிகளால் நிரம்பி வழிகின்றன.

யாழ். மாவட்டத்துக்கு மட்டும் தனியானதொரு பரீட்சையை நடத்த முடியாதென்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அகில இலங்கை ரீதியில் உயர்தரப் பரீட்சையை பின்போடுவதே ஒரே வழி.

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் பிரதமர், உயர்கல்வி அமைச்சர், பரீட்சைகள் ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளன என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் செயலாளர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தெரிவித்தார். (இ-4)


## முக்கிய அறிவித்தல்

யா/ அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த மஹோற்சவம்

17-7-95 அன்று ஆரம்பமாக இருந்த அம்பாளின் மஹோற்சவம் நாட்டின் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை அம்பாள் அடியார்களுக்கும் திருவிழா உபயகாரர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
சு. பாலசுப்பிரமணிய ஐயர்
ஆலய உரிமையாளரும், ஆதீனகர்த்தாவும்

பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா
ஆலய நிர்வாகம்
(37565)


## யாழ் பல்கலைக் கழக மாணவருக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ் பல்கலைக் கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு விஞ்ஞான பீட மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

## பரியோவான் முதலுதவி படை உறுப்பினருக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ். இந்துக்கல்லூரி பரியோவான் முதலுதவிப்படை, தனது அங்கத்தவர்களை இன்று ஞாயிறு மாலை 4.00 மணிக்கு பாடசாலையில் கூடுமாறு கோரி உள்ளது.

## சுகாதார திணைக்கள ஊழியருக்கு!

மானிப்பாய், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றிய சகலதர உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் நாளை திங்கள் காலை 9 00 மணிக்கு தமது பணிமனையில் தவறாது சமூகமளிக்குமாறு மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை. ஸ்ரீகாந்தா கோரி உள்ளார். (இ)

## கூட்டுறவு கடை இன்றும் திறந்திருக்கும்

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாவனையாளர்களின் நலன் கருதி இன்று ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் முழு நாளும் திறந்திருக்கும்.

யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மே மாத கடைசி இருவார 27பி புள்ளிக்கான இலவச உலர் உணவு விநியோகமும் —

வறுமை நிவாரண உணவு முத்திரை 10 ஆவது சுற்றின் 1 ஆம், 2 ஆம் இலக்க புள்ளிக்கான விநியோகமும் — தற்போது நடைபெற்று வருகின்றன. [இ-4]

## மாவீரர்களுக்கு அஞ்சலி

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையை முறியடிக்க நேற்று முன்தினம் இடம்பெற்ற சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு நேற்று குடாநாட்டு மக்களால் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர்களின் வித்துடல்கள் பகுதி பகுதியாக மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று மலர் தூவி, மலர் மாலை அணிவித்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலிக்காக வைக்கப்பட்ட வித்துடல்கள் பல இடங்களிலும் அலங்கார ஊர்திகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

எடுத்துச் செல்லப்பட்ட அனைத்து வீதிகளிலும் மக்கள் சாரிசாரியாக நின்று அஞ்சலி செலுத்தினர்.

யாழ். நகர வீதிகளிலும் மாவீரரின் வித்துடல்களைக் கொண்ட இரண்டு அலங்கார ஊர்திகள் ஊர்வலமாகச் சென்றன. (இ-15)

## இடம்பெயர்ந்த மக்கள் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 16
அரச சார்பற்ற நிறுவனங்கள், கிராம அலுவலர்கள், சனசமூக நிலையங்களின் தலைவர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், வணக்கத்துக்குரிய குருமார்கள், திணைக்களத் தலைவர்கள், அகதி முகாம்கள் இயங்கும் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோருக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பிரதேச செயலாளர் பணிமனையில் யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் நிவாரணம் குறித்து கலந்தாலோசிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## இடம்பெயர்ந்தோருக்கு நியாய விலையில் பொருள்

யாழ்ப்பாணம், ஜூலை 16
"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பினுள் தங்கி இருப்போருக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு அரிசி, மா, சீனி போன்ற உலர் உணவுப் பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் விநியோகித்து வருகிறது

பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப் பட்டு வரும் இப்பொருள்களை தாம் தங்கியிருக்கும் இடங்களுக்கு அண்மையிலுள்ள யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில், அப்பகுதி கிராம சேவையாளரின் சிபாரிசுடன் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்களுக்கான ஒரு வாரகால இலவச உலர் உணவு நிவாரணமும் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. [இ-4]


## முக்கிய அறிவித்தல்

யா/ இராமநாதன் கல்லூரி

யா/ இராமநாதன் கல்லூரி ஆசிரியர்கள், ஆசிரியைகள், எழுதுவினைஞர், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக குழுவினர், ஊழியர்கள் அனைவரும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை 16 - 7 - 1995 பிற்பகல் 3 மணிக்கு தயவு செய்து தவறாது ஒன்று கூடுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

ஆ. சிவஞானசுந்தரம்
அதிபர்
இராமநாதன் கல்லூரி

(37563)



சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்

## அறிவித்தல்கள்

[I] எமது சங்கப் பணியாளர்கள் அனைவரும் 17 - 7 - 1995 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் மொ. நி. III க்கு சமுகம் தரவும்.

[II] எமது சங்கத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தைப் பெறுபவர்கள் 27 பி நி. முத்திரைக்குரிய பொருள்களை உடன் தமது கிளைகளில் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- கிளை 7 இல் நிவாரணம் பெறுபவர்கள் உரும்பிராய் கிளை 32 இலும், கிளை 3, 4 இல் நிவாரணம் பெறுபவர்கள் சுன்னாகம் கிளை 28 இலும், கிளை 11 இல் நிவாரணம் பெறுபவர்கள் இணுவில் கிளை 14 இலும் பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
பொது முகாமையாளர்

[சி/1682]


## அளவெட்டிப் பகுதியில் ஷெல்லுக்கு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை. 16
அளவெட்டி, சண்டிலிப்பாய் பகுதிகளில் நிலைகொண்ட இராணுவத்தினரை கடந்த வெள்ளியன்று காலை விடுதலைப்புலிகள் விரட்டியடித்த வேளை ஏற்பட்ட மோதலின் போது —

இராணுவத்தரப்பில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் துப்பாக்கிப் பிரயோகங்களினால் பொது மக்களில் ஒரு பெண் உயிரிழந்தார். சிலர் காயமடைந்தனர்.

அளவெட்டியில்இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருந்தவர்களே, பின்னர் இராணுவத்தினர் புறமுதுகிட்டு ஓடும் போது மேற்கொண்ட தாக்குதல்களில் சிக்கினர்.

அளவெட்டி பெருமாள் கடவைபிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்ற சம்பவத்தில் இராணுவத்தினரால் அக்கோவிலில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் — கொல்லங்கலட்டியில் இருந்து இடம் பெயர்ந்து அளவெட்டியில் வசித்துவந்த சிவஞானம் அன்னலட்சுமி [வயது 40] என்பவர் மரணமானார்.

காயமடைந்தவர்களில் சின்னையா தனபாலசிங்கம், அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா நாகராசா [வயது 58] ஆகிய இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமுற்ற மற்றும் சிலர் வேறு சில வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றதாகதெரிவிக்கப்பட்டது. (உ-15)

# வெள்ளியன்று நடந்த தாக்குதலில் குறைந்தது 82 இராணுவத்தினர் பலி

"முன்னேறிப்பாய்தல்" நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களைத் தொடுத்திருப்பதை அடுத்து நிலைமையைச் சமாளிப்பதற்காக கூடுதல் படைகளை ஸ்ரீலங்கா அரசு வடக்கே அனுப்பியுள்ளது.

இதே சமயம் கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மட்டும் 82 இராணுவத்தினரை அரசுத் தரப்பு இழந்து விட்டது. 95 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சிங்கப்பூர் வானொலி" இத்தகவலை நேற்று மாலை வெளியிட்டது.

ஆனால் நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 21 படையினர் உயிரிழந்ததாகவும், 95 பேர் காயமுற்றதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க கொழும்பில் தெரிவித்தார்.

கடந்த ஞாயிறுமுதல் இடம்பெற்றுவரும் சண்டையில் 55 படையினர் மட்டுமே உயிரிழந்ததாக இராணுவச் செய்திக் குறிப்பு தெரிவித்தது. (உ-4)

## பல வெளிநாடுகளில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகளையும், மக்கள் குடியிருப்புகளை விமானக் குண்டு வீச்சின் மூலம் அழிப்பதையும் கண்டிக்குமாறு சுவீடன், நோர்வே, அவுஸ்திரேலியா, பிரிட்டன் அரசுகளிடம் பேரணிகளில் கலந்து கொண்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஏற்கனவே பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசின் இந்த படுகொலை நடவடிக்கையைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.


## கண்ணீர் அஞ்சலி

14-07-95 இல் அகால மரணமடைந்த யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் சங்கானை, சண்டிலிப்பாய் கிளையைச் சேர்ந்த மினி வெதுப்பக உரிமையாளர்

திரு. சந்தியாப்பிள்ளை வசந்தகுமார்
(காந்தி)

உயரப்புலம் ஆனைக்கோட்டை அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[சி/1681]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் சில அதிரடித் தாக்குதல்களை அடுத்தசில நாட்களில் எதிர்பார்க்கலாம்

கொழும்பு, ஜூலை. 16
முன்னேறிய இராணுவத்தினர் மீது மேலும் சில அதிரடித் தாக்குதல்களை அடுத்த சில நாட்களில் எதிர்பார்க்கலாம்.

— இவ்வாறு ஏ. எவ். பி. செய்தியாளர் அமால்ஜெயசிங்க கொழும்பில் தெரிவித்தார்.

'படையினரை தமது பிரதேசங்களுக்குள் நன்கு முன்னேற அனுமதித்து விட்டு, அவர்களைப் பல்வேறு முனைகளினாலும் அதிரடித் தாக்குதல் நடத்தி அழிப்பதே புலிகளின் உத்தியாக உள்ளது என்பது இப்போது புலனாகியுள்ளது'

'எனவே இத்தகைய தாக்குதல்கள் மேலும் தொடரும் — என்று அவர் குறிப்பிட்டார்.

'புக்காரா' தாக்குதல் விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தியது, முன்னேறும் அரசப் படைகளின் உளத் திட நிலையை பெருமளவு பாதித்திருப்பதாக பி.பி.ஸியின் தமிழ்ச்சேவைச் செய்தியாளர் ஆனந்தி குறிப்பிட்டார்.

# ஏறாவூரில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 16
மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் பொலிஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு.

இந்தத் தாக்குதலில் 5 பொலீஸ் அதிகாரிகள் உயிரிழந்தது தெரிந்ததே.

| | | |
|---|---|---|
| ★ ரி 56 – 1 ரக துப்பாக்கி | — | 5 |
| ★ ஷொட்கண் | — | 1 |
| ★ 60மி. மீ மோட்டார் | — | 1 |
| ★ 40 மி. மீ. ஷெல்கள் | — | 47 |
| ★ 60 மி. மீ. ஷெல்கள் | — | 18 |
| ★ 38 மி. மீ. ஷெல்கள் | — | 16 |
| ★ 38 மி. மீ. ஹோஸ்கண் | — | 1 |
| ★ 60 மி. மீ. பேஸ்பிளேட் | — | 2 |
| ★ 60 மி. மீ. லைபோட் | — | 1 |
| ★ 60 மி. மீ. எம்போஸ் | — | 2 |
| ★ 60 மி. மீ. பூச்சிய நிலையாக்கி | — | 1 |
| ★ புகைக்குண்டுகள் | — | 10 |
| ★ கே. 4 குண்டுகள் | — | 4 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 938 |
| ★ ஏ. கே. ரவைக்கூடு | — | — |
| ★ அதற்குரிய மகஸின் | — | 28 |
| ★ ஏ. கே எல் எம். ஜி ஹோல்ஸர் | — | — |
| ★ கிட்பாக் | — | 16 |
| ★ மின்கல சார்ச்சர் | — | 12 |
| ★ தொலைத் தொடர்பு சாதனம் | — | 1 |
| ★ வோக்கி | — | 1 |
| ★ போக்கஸ்லைட் | — | 2 |

(இ-3)

# செஞ். சங்க ஜெனீவா அறிக்கைக்கு இலங்கை அரசு கடும் ஆட்சேபம்

மணிலா, ஜூலை. 16
நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானப் படையின் புக்காரா விமானம் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகம் ஜெனிவாவில் வெளியிட்டுள்ள அறிக்கைக்கு இலங்கை அரசு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசை கலந்தாலோசிக்காமல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இந்த அறிக்கையை விடுத்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச சந்தர்ப்பம் கோரப்பட்டதாகவும்—

அதற்கு அனுமதி தரப்படவில்லை என்றும்— செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு அமைப்புக்கள் இப்படி நடக்கும் நிலை கவலை அளிப்பதாக உள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். (எ-8)

# யாழ். ஆஸ்பத்திரியில் ஊழியர் தங்க வசதி

யாழ் போதனா வைத்திய சாலையில் கடமை புரியும் சகல தரப்பு ஊழியர்களின் பாதுகாப்புக் கருதியோ அல்லது இடம்பெயர்ந்தோ சொந்த இருப்பிடத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை வளவில் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க நிர்வாகம் ஏற்பாடுகளை செய்து வருகிறது.

வைத்தியசாலை வளவில் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் தங்க விரும்பும் ஊழியர்கள் தமது விவரங்களை பணிப்பாளரிடம் பதிவுசெய்து கொள்ளுமாறு வைத்திய சாலைநிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது. (ஐ-15)

## காயமடைந்தோருக்கு உதவ மாணவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 16
இன்றைய யுத்த நிலையில் காயமடைந்த மக்களைப் பராமரித்தல், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிதல், இரத்த தானம் செய்தல் மற்றும், பதுங்கு குழிகளை அமைத்தல் போன்ற உதவிகளைச் செய்ய மாணவச் சமூகத்தின் பங்களிப்பு பெரிதும் தேவைப்படுவதால்—

இத்தகைய பங்களிப்புகளை வழங்க விரும்பும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களூடாகவோ அல்லது நேரடியாகவோ—

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்பாக (குமாரசாமி லேன்) உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் 'சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (எ)

## விவரங்களை சமர்ப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூலை 16
தற்போது நடைபெறும் குடா நாட்டின் மீதான இராணுவ நடவடிக்கையில் காணாமல் போயுள்ள அல்லது இறந்த, இடம்பெயர்ந்த, இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர் பற்றிய விவரங்களை உடனடியாக தம்மிடம் சமர்ப்பிக்கும்படி, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (எ)

## 'சுப்பசொனிக்' விமானம் சுன்னாகத்தில் குண்டு வீச்சு

### பல கடைகள் சேதம்; ஒருவர் காயம்

சுன்னாகம் சந்தைப்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற "சுப்பசொனிக்" விமானக்குண்டு வீச்சில் ஒருவர் படுகாயமடைந்தார். பல கடைகள் பலத்த சேதமடைந்தன.

சுன்னாகத்தைச் சேர்ந்த தம்பிராசா (வயது 70) என்பவரே — காயமடைந்தவராவார் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-15]

## மானிப்பாயைச் சேர்ந்த குடும்பத்தின் பரிதாப நிலை

கடந்த 9ஆம் திகதி மானிப்பாய் ஆஸ்பத்திரியடியில்இடம் பெற்ற புக்காரா குண்டுவீச்சின் போது யாழ்ப்பாணம் டேவிட் வீதியைப்பிறப்பிடமாகக் கொண்ட ச. பண்டலியன் அகஸ்டீன் என்பவரது குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களது ஒரு பிள்ளையான யூடின்ருவேஸ் காரர் (வயது 12) என்ற சிறுவன் காயமின்றிதப்பிச் சென்றதாகவும் தற்போது அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை என்றும் தெரியவருகிறது.

இவர்கள் மானிப்பாயில் வசித்துவந்த வீட்டைவிட்டு வெளியேறியபோது தம்முடன் எடுத்துவந்த உணவுமுத்திரை குடும்பஅட்டை பிள்ளைகளின் பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டைகள், தங்க நகைகள் ஒருதொகைப்பணம் ஆகியன அடங்கியபை ஒன்று ஏசியா சைக்கிளில் கட்டப்பட்ட நிலையில் காயமடைந்த இடத்திலேயே கைவிடப்பட்டுவிட்டது.

இதனால் அந்தக்குடும்பம் தற்போது மிகவும் நிர்க்கதியான நிலையில் உள்ளது. (ஐ-15)

## சங்கானை கோட்டம் கோப்பாயில்

யாழ்ப்பாணம், ஜூலை 16
சங்கானைக் கல்விக்கோட்ட அலுவலகப் பணிகள் நாளை திங்கட்கிழமை முதல் கோப்பாயில் உள்ள கல்வியலயம் —2பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

எனவே உத்தியோகத்தர்கள் அனைவரையும் அங்கு சமூகமளிக்குமாறும்—

அதிபர்கள், அல்லது உப அதிபர்கள் தத்தமது பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பத்திரங்களை கொண்டு வந்து ஒப்படைக்குமாறும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ)

## கிழக்கில் முகாம்களை ஒன்றாகத் தாக்க திட்டமாம்

மாதுறு ஓயாவின் மேலாகச் செல்லும் ஒட்டுமாவடி— மன்னம்பிட்டிப் பாலத்தை தகர்த்துவிட்டு கிழக்கில் உள்ள படைமுகாம்கள் மீது ஒரே சமயத்தில் தாக்குதல் நடத்த விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும்—

இது பற்றிய தகவல் படையினருக்கு கிடைத்துள்ளதாகவும் சிங்களப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-எ-6)

# அரசின் 'ஜூலை15' காலஎல்லை முடிவு

### எதிர்ப்பு நடவடிக்கைக்கு முஸ்தீபு

கொழும்பு, ஜூலை. 16
நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் விடுத்திருந்த கால எல்லை நேற்றுடன் முடிவடைந்தது.

இந்த ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது வாக்குறுதி அளித்திருந்தார்.

ஜே.வி.பியின் தேசிய மீட்பு முன்னணியின் வேட்பாளர் கலப்பதி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகிக்கொள்வதற்கு இந்த வாக்குறுதியே காரணமாக இருந்தது.

தற்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டதால் அரசுக்கு எதிரான சக்திகள் இன்று முதல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கலாம் என்று கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசின் இனப்பிரச்சினை தீர்வுத் திட்டம் வெள்ளிக்கிழமை வெளியிடப்படுவதாக இருந்தது. அதுவும் மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் யுத்தத்தை அவசரப்பட்டு ஆரம்பித்ததே தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமற் போனதை நியாயப்படுத்துவதற்கே என்றும் அரசுக்கு எதிரான சக்திகள் தெரிவிக்கின்றன.

## மல்லாகத்தில் குண்டு வீச்சு; ஆசிரியை பலி

"புக்காரா" விமானம் நேற்று முன்தினம்வீழ்த்தப்படுவதற்கு முன்னர், மல்லாகம் பகுதியில் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் வங்களா ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி சுசீலாதேவி செல்வேந்திரா [வயது 35] என்ற ஆசிரியை உயிரிழந்தார்.

மயிலணிமகா வித்தியாலய ஆசிரியையான இவர் இரண்டு பிள்ளைகளின் தாயாராவார்.

புக்காரா குண்டு வீச்சில் சிவராசா இலகவதி [வயது 37] என்பவரும் காயமுற்றார்.

# தேடப்படுவோர் பட்டியல்

★ யாழ். மாவட்ட சமூகநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தொல்புரம் சமூகநல சேவை நிலைய ஊழியர் இராசையா இராசேந்திரத்தைத் தேடுகின்றார்.

★ வட்டு. கிழக்கு சித்தன் கேணியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ். மின்சார நிலைய வீதி "உதயன்" விளம்பரப் பணிமனைக்கு அருகில் தங்கியுள்ள, கே. சந்திரசேகரம்பிள்ளை தனது சகோதரியைத் தேடுகின்றார்.

★ சங்கானையில் இருந்து இடம்பெயர்ந்து 69, பிறவுண் வீதி, கொக்குவிலில்தங்கியுள்ள ச. சிவராசா, தனது தாயாரையும் தங்கையையும் தேடுகின்றார்.

★ சித்தன் கேணியைச் சேர்ந்த திருமதி மாசிலாமணி நேசம்மா, தனது பெரிய தாயார் குடும்பத்தை, என். செல்வரத்தினம், வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கின்றார்.

★ 122, சப்பல்வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சம்பந்தர் இராஜரட்ணம், தனது தாயாரையும், சகோதரர்களையும் தேடுகின்றார்.

★ நாவலடி, வட்டு. தெற்கில் இருந்து இடம்பெயர்ந்து, 6ஆம் ஒழுங்கை, இல. 8, கந்தர்மடத்தில் தங்கியுள்ள கே. தம்பிஐயா, தனது மகளைத் தேடுகின்றார்.

★ சங்கானை கிழக்கு பிரான்பற்றைச்சேர்ந்த மார்க்கண்டுசண்முகலிங்கம், தனது தாயாரையும், சகோதரனையும் அப்புத்துரை, சிவகுல வீதி, உரும்பிராய் கிழக்கில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கின்றார்.

★ நாவலர் பாடசாலை ஒழுங்கை, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ச. சின்னத்துரை தனது தகப்பனாரைத் தேடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

புறொயிலர் கோழிகளும், பன்றியும், பன்றிக் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. அண்ணா பாம், இணுவில். [சி-1668]

Broilers மற்றும் இறைச்சிக் கோழிகள் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகை உண்டு. [37522]

*புலமைப் பரிசில் பரீட்சை*

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி ''பொது விவேகம்'' 97/- வினாத்தாள் I, IIற்குரியது. வெளியீடு: அகிரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1717)

*வகுப்புக்கள்*

A/L மாணவர்களுக்கும், பதவி உயர்வு பரீட்சைக்குத் தோற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கும் 'கணக்கியல்' வீடுகளுக்கு வந்து கற்பித்துத் தரப்படும். கடிதம் மூலம் தொடர்பு கொள்க: V. T. இந்திரன், B. Com. இல: 70/7, சொலமன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (37407)

*கண்ணன் திருமணசேவை*

எங்களிடத்தில் சகல மதத்தவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடு மணமக்கள் உண்டு. முதல் கடிதத்திலேயே முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். 40 சாத்திரியார் லேன், அரியாலை. (37513)

**ஆள் தேவை**

திருநெல்வேலி வர்த்தகப் பாதுகாப்புக்கு ஊழியர் தேவை. முக்கியமாக திருநெல்வேலிக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: புதிய தாரகை பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி. (17-07-95 காலை சந்திக்கவும்). (37555)

## பிரதேச செயலகங்கள் நல்லூரில்

வலிகாமம் மேற்கு, ஜூலை 16

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் நாளை திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக இயங்கவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளார். (ஐ-175)


## தபால் ஊழியருக்கு அவசர அழைப்பு

தற்போதைய சூழ்நிலையில், மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் பல அஞ்சல் அலுவலகங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால்—

யாழ். அஞ்சலகத்தைச் சேர்ந்த சகலஉத்தியோகத்தர்களையும், சிற்றூழியர்களையும் நாளை திங்கட்கிழமை கடமைக்கு சமுகமளிக்கும்படி பிரதம அஞ்சல் அதிபர் திரு சு. கோடீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)

---

## அன்றும் இன்றும் சாரணர்



### திரு. பசுபதி கனகசபாபதி A. L. T.

அவர்களின் சாரணியத்தில்

## 60 ஆண்டு நிறைவுக்கு எம் வாழ்த்துக்கள்

கிளிநொச்சி மாவட்ட
சாரணர் கிளைச் சங்கம்.
(தென்மராட்சி)

[37545]

---

# ஜீவாகாரம்

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உப உணவாகும்.

சிறுவர் முதல் வயோதிபர் வரை பாவிக்கக் கூடியது

*சீனியுடனோ வாழைப்பழத்துடனோ கலந்து பாவிக்கலாம்.*

**அண்ணா தொழிலகம்**

(சி-1670)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 07 — 12 — 1945

உதிர்வு: 16 — 06 — 1995

### அமரர் வேலுப்பிள்ளை பரமசிவம்

[அரசாங்க மரக்கூட்டு ஸ்தாபனம் உதவி முகாமையாளர்]

எமது குடும்பத்தில் கலங்கரை விளக்காக இருந்து எம்மை எல்லாம் உயரவைத்து எம்மை மீளாத்துயரத்தில் ஆழ்த்தி விட்டு பிரிந்து ஒரு மாதம் ஆனாலும், உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றென்றும் அகலாது.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று [16 - 07 - 1995] ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றும்படி உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
அம்மா, மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

நம்: 20, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[37402]

---

## பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் எல்லோரையும் நாளை திங்கட்கிழமை மு. ப. 11-30 மணிக்கு சிரேட்ட பொது அறையிலே கூடுமாறு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் கேட்டுள்ளன.

தற்போதுள்ள நிலைமை பற்றி இக் கூட்டத்திலே ஆராயப்படும். (அ)

---

## திருமண அறிவித்தல்

மங்களகரமான யுவ வருடம் ஆனி மாதம் 32 ஆம் நாள் (16 - 07 - 95) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-30 மணிமுதல் 3-30 மணிவரை உள்ள சுப முகூர்த்த வேளையில்,

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| --- | --- |
| **சிறிஸ்கந்தராஜா** | **சதீசா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

லண்டனில் திருமணம் நடைபெறும் என்பதை அன்புக்குரிய அனைவருக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

திரு. திருமதி சிற்றம்பலம்
விளானை, கலபூமி,
காரைநகர்.

[37558]

---

## நெருக்கடி கால உளவியல் முதலுதவி

நெருக்கடி கால உளவளத்துணை பற்றிய கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு சாந்தியகத்தினால் பயிற்றப்பட்ட உளவளத்துணையாளர்களும், அங்கத்தவர்களும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 18-07-95 மு. ப. 9-00 மணிக்கு சாந்தியகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர்.

தலைவர்,
சாந்திகம்.

(சி-1677)

---

## அவசர அழைப்பு

யாழ். பல்கலைக்கழக அனைத்து ஊழியர்களையும் 17 - 07 - 95 திங்கள் காலை 9-30 மணிக்கு பல்கலைக்கழக தாவரவியல் விரிவுரை மண்டபத்தில் தவறாது ஒன்று கூடுமாறு வேண்டுகின்றோம்.

செயற்குழு,
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

[37559]

---

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணியாளர்களின் கவனத்திற்கு

தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகள் தொடர்கின்றன.

மேலதிக விவரங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகத்தில் தற்காலிகமாக இயங்கும் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**த. பொ. மே. நிறுவனம்.**

[சி-1679]

---

## காணவில்லை

வட்டுக்கோட்டை சிவன்கோயிலடியைச் சேர்ந்த மு. மாருதி அமிர்தலிங்கம் என்பவருடைய வளர்ப்பு மகன் தவச்செல்வன் (ரவிச்சந்திரன்) என்பவர் 09-07-1995 பளை வ. சுப்பிரமணியம் என்பவருடைய வீட்டிலிருந்து காணாமல் போயுள்ளார். இவரைப் பற்றி தெரிந்தவர்கள் மேற்படி இரு விலாசங்களிலும் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
வ. சுப்பிரமணியம்
புலோப்பளை,
பளை.

[37560]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## வற்புறுத்தல் போதாது

யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெறும் போரினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்தும் அவர்களின் உடைமைகள் சேதப்படுத்தப்படுவது குறித்தும் மேற்கு நாடுகள் உட்பட உலக நாடுகள் ஓரளவேனும் கவனத்துக்கு எடுத்திருப்பதாக அறியப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, இப்போது நடைபெறும் போரை நிறுத்தி, அதற்குப் பதிலாக மீண்டும் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பல நாடுகள் ஸ்ரீலங்கா அரசைக் கோரியுள்ளன. கனடா, ரஷ்யா, ஆஸ்திரேலியா ஆகியன இது விடயத்தில் மிகவும் அக்கறை காட்டுகின்றன.

போரின் ஊடாக சமாதானம். போர் தமிழருக்கு எதிரானதல்ல, விடுதலைப் புலிகளுக்கு எதிரானதே; என்பன போன்ற அரசின் பொய்களை நம்பி ஐரோப்பிய நாடுகள் உட்பட உலக நாடுகள் பலவும் ஏமாந்து விட்டன.

அதனால் ரஷ்யா, உக்ரேன், இந்தோனேஷியா போன்ற நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்களை வழங்கவும், ஏனைய பல நாடுகள் இராணுவ — தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் முன்வந்தன. அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு உதவுவதில் முன்னுக்கு நின்றன.

யாழ்ப்பாணத்தில் அரசு போரைத் தொடங்கி அதனை நடத்தும் விதத்தைக் கேள்வியுற்றதும் இந் நாடுகள் தாம் ஏமாற்றப் பட்டுவிட்டதை உணர்ந்திருக்கவேண்டும். அதனாலேயே அவைபோரை நிறுத்தி சமாதானத்தைக் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு வலியுறுத்தத்தொடங்கியுள்ளன.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், வெறும் சொல்வளவிலான கோரிக்கை, வலியுறுத்தல், வற்புறுத்தலால் அதனைத் திருத்த முடியாது; வழிக்குக் கொண்டு வரமுடியாது. செயல் ரீதியாக, நடைமுறை ரீதியான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

ஆயுத, இராணுவ உதவிகளை வழங்குவதற்கு முன்வந்த நாடுகள் அவற்றை நிறுத்த வேண்டும். போரை நிறுத்தாவிடில் உடனடியாக தமது உதவிகளை நிறுத்தப் போவதாக நிதி மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கும் நாடுகள் எச்சரிக்கை செய்யவேண்டும்.

வடக்கு — கிழக்கில் இயங்கும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களுக்கு இங்குள்ள கள நிலைமை தெரியும். ஸ்ரீலங்கா அரசாங்கம் நடத்தும் போரினால் பாதிப்புறுபவர்கள் பொதுமக்களே அன்றி விடுதலைப் புலிகள் அல்ல என்பதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு ஸ்ரீலங்கா இராணுவம் அழிப்பது அப்பாவித் தமிழ் மக்களையேஎன்பதும்அவற்றுக்குத் தெரியும்.

எனவே தத்தமது நாடுகள் போரை நிறுத்த ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுப்பதனைத் தூண்டும் முக்கிய பங்கு தொண்டர் நிறுவனங்களையே சார்ந்ததாகும். உலகளாவிய ரீதியில் இதனை அவசர விவகாரமாக்கக் கூடிய சக்தியும் அவற்றிடம் உண்டு.

# இராணுவத்துடன் வந்த தமிழ்க் குழு எம்முடன் கடுமையாக நடந்தது

### அளவெட்டியில் சிக்குண்டு மீண்டவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

''இராணுவத்துடன் வந்த தமிழ்க் குழுவொன்று மிகவும் கடுமையாக எம்முடன் நடந்து கொண்டது''.

— இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருந்து, புலிகளின் அதிரடித் தாக்குதல் மூலம் விடுவிக்கப்பட்ட கந்தையா நாகராசா [வயது 58] என்ற அளவெட்டிவாசியே இவ்வாறு கூறினார்.

இராணுவத்தினரின் ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது அளவெட்டிப் பகுதியில் சிக்குண்டு, பின்னர் நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் மூலம் மீட்கப்பட்ட இவர், தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 9ஆம் திகதி அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது எதிர்பாராதவிதமாகசிக்கிக்கொண்ட நான், அவ்வேளை என்னுடன் இருந்த எனது 20 வயது மகளை பின்பக்கவேலியை வெட்டி தப்பிஓடவைத்தேன்.

சில மணி நேரத்தின் பின் எனது வீட்டுப் பக்கம் வந்த இராணுவத்தினர் என்னைப் போல அப்பகுதியில் சிக்கிக் கொண்ட சுமார் இருநூறு பேரை அங்கு பெருமாள் கடவை பிள்ளையார் கோவிலில் தங்கவைத்தனர்.

இதற்கு முந்திய காலங்கள் போலல்லாது பிடிபட்டவர்களிடம் இராணுவம் மிகமரியாதையாக நடக்க முயன்றதை அவதானிக்கமுடிந்தது.

ஆனால் அவர்களுடன் வந்த— அரைக்கால் சட்டை மற்றும் சேட் அணிந்த — சுமார் 25 பேரைக்கொண்ட தமிழ் இளைஞர் குழுவே எம்முடன் கடுமையான முறையில் நடந்து கொண்டது. இவர்கள் அதிகம் கதைக்கவில்லை. எனினும் சாதாரணமாக தமிழிலேயே அவர்கள் பேசிக்கொண்டனர்.

#### திருட்டு

இக்குழுவினர் அப்பகுதியில் சில திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டனர்; அப்பகுதியில் உள்ள ஆடு, கோழிகளை அதிகளவு பிடித்து சமைத்து உண்டனர்.

அப்பகுதிகளில்இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது— ஷெல் தாக்குதலின் போது — பல கால்நடைகள் வயல் பகுதிகளில் இறந்து கிடந்தன. இதனால் இரண்டு மூன்று நாட்களில் அப்பகுதிகளில் இருக்கமுடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

நாம் இருந்த ஆலயப் பகுதியில் இராணுவம் புல்டோசர் கொண்டு பாரியமண் அணை ஒன்றை ஏற்படுத்தி பாதுகாப்பு அரண் அமைத்திருந்தது. இந்த அரணில் இராணுவத்தினர் இரவு பகல் காவல் இருந்தனர்.

#### அதிகாலை 1 மணிக்கு

ஐந்தாம் நாளான வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் திடீரென ஏற்பட்ட குண்டு, ஷெல், துப்பாக்கி வெடிச் சத்தங்கள் எம்மை அதிர வைத்தன.

சத்தங்களைக் கேட்டு நித்திரையில் இருந்து விடுபட்ட நாம், இரு தரப்பினருக்கும் இடையில் நெருக்கமான போர் நடப்பதை உணர்ந்து, தொடர்ந்து அந்த ஆலயத்தினுள் இருக்கப் பயந்து, அப்பாலிருந்த வீடுகளில் பதுங்கிக் கொண்டோம்.

குண்டுச் சத்தங்களிடையே ''அம்மே, அம்மே'' என்ற ஓலங்கள் எம் காதை உறுத்தின. அவலக்குரல்களின் இடையே இராணுவத்தினர் ஓடிக் கொண்டிருப்பதையும் அவதானித்தோம்.

விடிந்ததும் நாமிருந்த பகுதியை நெருங்கிப் பார்த்த போது, காவலரண்களிலிருந்த இராணுவத்தினரை அவ்விடத்தில் காணவில்லை. விடுதலைப் புலிகளே நடமாடினர்,

இச்சந்தர்ப்பத்தில் நாம் வெளியேறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டோம். வெளியேறி வந்த போது இடையில் வயல் பகுதிகளில் இரண்டு இராணுவத்தினரின் சடலங்களைக் கண்டேன். ஒரு சடலத்தின் கையில் சுடுநீர் போத்தல் ஒன்றும் காணப்பட்டது

வெளியேறி வந்து கொண்டிருந்த வேளையில் இடையிடையே இடம்பெற்ற ஷெல் வீச்சினால் நானும் என்னுடன் வந்த சிலரும் காயமடைந்தோம் — என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதியன்று காலை தான் தப்பிஓடவைத்த மகளையும் தாம் சந்தித்து விட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ 15)

# எக்காரணம் கொண்டும் அரசின் நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது

### அரச வட்டாரங்கள் தகவல்

யுத்தத்தில் சம்பந்தப்படாதோர் உயிரிழக்கின்றார்கள் என்ற காரணத்துக்காகவோ —

அல்லது தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள், சர்வதேச நிவாரண முகவர் அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்ற காரணத்துக்காகவோ —

தற்போது மேற்கொள்ளப் படும் ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்தமாட்டாது.

பொதுமக்கள் இழப்புக்களைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகளை மட்டும் அரசு செய்யும்.

அதிகாரபூர்வ அரச வட்டாரங்கள் இவ்வாறு தகவல் வெளியிட்டன.

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு மேற்படி அமைப்புகளும், தமிழ் அரசியல்வாதிகளும் விடுத்துள்ள கோரிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் அரசு தெரிவித்து விட்டது.

— இவ்வாறு 'த ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

# முன்னேறி பாய்தல் குறித்து ஆய்வாளர் கேள்விக்குறி

இராணுவம் யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து ஒரு வாரமாக நடத்தி வரும் ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் இலக்கு காரைநகரிலிருந்து பலாலிக்கு துருப்புகள் விநியோக வழி ஒன்றை அமைப்பது தானா?

இவ்வாறு கொழும்பில் இராணுவ ஆய்வாளர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

உயர் பயிற்சி பெற்ற இலட்சியப் பற்றுமிக்க, விடுதலைப் புலிகள் நிறைந்து காணப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் —

அதன் மேற்குப் பகுதியில் இருந்து நான்கு படையணிகளைக் கொண்டு நடத்தும் தாக்குதல்களால் இலக்கை அடையமுடியாது —

இப்போது காங்கேசன் துறையிலிருந்துபலாலிக்குவிநியோக வழி ஒன்று உள்ளது. ஆனால் காங்கேசன் துறைமுகம் பாதுகாப்பற்றதாக மாறி வருகிறது —

அதனால் காரைநகர் — பலாலி விநியோகவழியை உருவாக்க படைத்துறையினர் முடிவு செய்திருக்கின்றனர் —

இந்த வழியைத் தக்கவைத்துக் கொள்வதற்கு, புதிதாகக் கைப்பற்றும் இடங்களைத் தக்கு வைப்பதற்கு, ஏராளமான துருப்புக்கள் தேவைப்படும். அத்தோடு பெரும் பணச் செலவும் உண்டாகும் —

இவற்றை கருத்தில் கொள்ளாமல் ''முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டது பல பாதக விளைவுகளை உண்டாக்கும் — என்று இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

[அ]

# தாக்குதலை அரசு நிறுத்த வேண்டும்

### கூட்டணி கோருகிறது

கொழும்பு, ஜூலை 16

இராணுவம் புலிகள் மீது நடத்தும் அதிரடித் தாக்குதல்களை விலக்கிவிட்டு அமைதி பேச்சுவார்த்தையைத் தொடங்கவேண்டும்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு நேற்று எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களின் சார்பில் தாம் இந்தவேண்டுகோளை விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பால்மா இன்றி குழந்தைகள் அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 16

இடம்பெயர்ந்தோர் முகாம்கள் பலவற்றில் குழந்தைகளுக்கான பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

ஒரு மாதம் முதல் 6 மாதம் வரையான குழந்தைகளுக்கான இல. 1 லக்டோஜின் — 7 மாதம் முதல் 12 மாதம் வரையான குழந்தைகளுக்கான இல. 2 லக்டோஜின்— 12 மாதம் முதல் 18 மாதம் வரையான குழந்தைகளுக்கான அங்கர் — போன்ற பால்மா வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக தெரிய வருகிறது.

இதேபோன்று பாய், விளக்குகள், சவர்க்காரம் போன்ற பொருள்களும் முகாம்களுக்கு அதிகம் தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-4]

## மூடப்பட்டன

மட்டக்களப்பின் படுவான் கரைப் பகுதியில் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

மண்டூர் 14 ஆம் கொலனி அதிரடிப்படை முகாம் மூடப்பட்டுள்ளது.

தாந்தாமலை முருகன் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள புழுகணாவி இராணுவ முகாமையும் இராணுவத்தினர் மூடிவிட்டனர்.

[இ-4]

**குடாநாட்டில்---**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 12 ஆயிரம் படையினரில் தற்போது கொல்லப்பட்ட ஒரு சில நூறு பேரைத் தவிர எஞ்சியோர் தொடர்ந்து குடாநாட்டில் இருப்பதாலும்—

பெரும் ஆரவாரத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை புஸ்வாணம் ஆனதால், ஸ்ரீலங்கா அரசியல் அரங்கில் தனக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைச் சமாளிப்பதற்காகவும் —

அரசு புதிய நடவடிக்கை ஒன்றை குடாநாட்டின் வேறு முனையில் ஆரம்பிக்க முயற்சிக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

எனவே இத்தகைய நிலைமையை எதிர்கொள்ளக் கூடியதாக குடாநாட்டு மக்கள் தயாராக இருக்கவேண்டும் என்றும்—

அதற்காக மக்களைப் பாதுகாக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து, புலிகளைப் பலப்படுத்த இளம் சமுதாயம் முன்வரவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [உ]

**ரூபவாஹினி---**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி நிறுவனங்கள் கடந்த ஐந்து நாட்களாக இந்நடவடிக்கை தொடர்பாக பீற்றிக் கொள்ளும் பல செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தன. [உ]

**முன்னேறிப்--**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கள், அடித்து மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று மாலையும் பல பிரதேசங்களில் படையினர் மீது புலிகள்பாய்ச்சல் நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டனர். [உ]

**சுன்னாகத்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே சம்பவத்தில் தங்கராசா சிவபாக்கியம் [வயது 52], கந்தசாமி கிருபாமூர்த்தி [வயது 23] ஆகியோரும் அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ரதீஷன் (வயது 24) என்பவரும் காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [உ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 6

16/07/1995

# கண்ணீர் அஞ்சலி

## வீரவேங்கை சந்திரசேகரம்
### [தண்டபாணிமூர்த்தி சசிகுமார்]

தமிழீழ மண்மீட்புப் போரில் 14 - 07 - 95 இல்
வீரச்சாவு எய்திய எமது வித்தியாலய
சிரேஷ்ட மாணவத் தலைவன்
சசிகுமாருக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேலணை. — சைவப்பிரகாசம்

(37553)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுசீலாதேவி செல்வேந்திரா
(ஆசிரியை, மயிலணி மகாவித்தியாலயம்)

மல்லாகம் வங்களா ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி சுசீலாதேவி செல்வேந்திரா 14-07-95 வெள்ளிக்கிழமை காலை அகால மரணமானார்.

இவர் சபாபதி செல்வேந்திராவின் (ஈஸ்வரி நேசிக்கோம், சுன்னாகம்) அன்பு மனைவியும், பிரதீப்குமார் [யாழ். இந்து உயர்தர வகுப்பு மாணவன்], பிரசன்னா [தெல்லிப்பழை. யூனியன் கல்லூரி ஆண்டு - 10] ஆகியோரின் அன்புத் தாயாரும், மருதம்பாளையைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் - சிவாகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், மல்லாகம் வங்களா ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாபதி - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும், சந்திரபானன், பாலச்சந்திரன், சகுந்தலாதேவி, உதயச்சந்திரன், பாலகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்கையர்திலகம், ஈஸ்வரிதேவி, வசந்தி, அப்புத்துரை, சாரதாதேவி, ஆனந்ததேவி, ரவீந்திரா [லண்டன்] ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (14-07-95) வெள்ளிக்கிழமை மாலை சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச. செல்வேந்திரா
(கணவர்)

[37552]

## செல்லப்பா அருணாசலம்
(கிளி கடை - கூழாவடி)

உடுவில் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், இணுவில் தெற்கை வசிப்பிடமாக கொண்டிருந்தவருமான செல்லப்பா அருணாசலம் காலமாகிவிட்டார்.

இவர் யோகேஸ்வரியின் அன்புக்கணவரும், வனிதா வனஜா, அனுஜா ஆகியோரின் அன்புத் தகப்பனும், செல்லப்பா இராசரத்தினம் (துரைசிங்கம்), செல்லப்பா இராமநாதன், திருமதி நல்லம்மா, திருமதி இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகசுந்தரம் (கனடா), ஜெயராஜா (கனடா), கணேசலிங்கம் (கனடா), திரு. செ. இராசதுரை, திரு. நா. வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை [16 - 07 - 95] காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்லப்பா இராசரத்தினம்
செல்லப்பா இராமநாதன்
[சகோதரர்கள்]

இணுவில் தெற்கு,
இணுவில்.

[37564]

## இராசையா சிவபாதசுந்தரம்

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவபாதசுந்தரம் அவர்கள் 13- 07- 95 அன்று கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசையாவினதும், சிவபாக்கியத்தினதும் [பாஹ்றேன்] அன்பு மகனும், திருமதி பத்மாவதி இராஜசிங்கம், (ஆசிரியை செங்குந்த இந்துக்கல்லூரி] திருமதி பூபதி தவராஜசிங்கம் (தொலைத் தொடர்பு திணைக்களம் மட்டக்களப்பு]. திருமதி புஸ்பராணி கதிரவேலு (ஆசிரியை புனித ஜோன் பொஸ்கோ), தனபாலசுந்தரம் (ஜேர்மனி), தேவபாலசுந்தரம் (ஆஸ்திரேலியா], விமலராணி(ஆஸ்திரேலியா) வதனராணி (பாஹ்றேன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராஜசிங்கம், தவராஜசிங்கம், கதிரவேலு, வரதா, நளினி, ரவீந்திரன், சந்தஞானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ப. இராஜசிங்கம்
திருமதி பு. கதிரவேலு
(சகோதரிகள்)

59, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[37567]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 29[illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 07 - 1995 இல் அச்சிட்டுப் வெளியிடப்பெற்றது

## அதிபர்கள் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஜி சீ. ஈ. சாதாரண தர உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் அவசர தேவை கருதி பாடசாலை அதிபர்களை இன்று காலை 9 00 மணிக்கு முன்பதாகச் சந்திக்கும்படியும் —

அதிபரின் அறிவுறுத்தலுடன் யாழ். கல்வித்திணைக்களம் வலயம் - 1 க்கு தவறாது வருகை தருமாறும் — பிரதி கல்விப்பணிப்பாளர் கோரி உள்ளார். [இ]

## மேஜரின் இல்லம் முன் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூலை 16

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் இல்லத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்ற இலங்கை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பிரிட்டனில் உள்ள சுமார் நூறு தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பான சர்வதேச தமிழ் சம்மேளனம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

சிறு குழந்தைகளில் இருந்து முதியவர்கள் வரை பலதரப்பட்ட தமிழ் மக்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

யாழ். குடாநாட்டில் தேவாலயங்கள், கோயில்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், தொழிற்சாலைகள் மீது ஸ்ரீலங்கா அரசால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் ஷெல் தாக்குதல்களையும் கண்டித்து குரலெழுப்பவும் —

ஸ்ரீலங்கா அரசுக்கான வெளிநாட்டு உதவியை நிறுத்தக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (இ-4]

## முன்னேறிய பல...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன் தினம் அதிகாலை 1 08 மணிக்கு அளவெட்டிப் பகுதியில் படையினரின் நிலைகளுக்குள் ஊடுருவி. அவர்களின் வியூகங்களைத் தகர்த்தெறிவதுடன் ஆரம்பமான 'புலிப்பாய்ச்சல்' தாக்குதல் நடவடிக்கை நேற்று மாலை வரை தொடர்ந்தது. இத்தாக்குதல்களில் நூற்றுக் கணக்கான இராணுவத்தினரையும் 'புக்காரா' தாக்குதல் விமானத்தையும் இழந்ததை அடுத்து முன்னேறிய பிரதேசங்களிலிருந்து ஓடித் தப்பும் நிலைக்கு ஸ்ரீலங்காப் படைகள் தள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது.

மீட்கப்பட்ட பிரதேசங்களில் — தொறிக் கணக்கில் கம்பிச் சுருள்களும், சாக்குகளும் படையினரால் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்தன. அவற்றைத் தற்போது புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இது தவிர இப்பிரதேசங்களில் பல பனை, தென்னை மரங்கள் படையினரால் தறித்து வீழ்த்தப்பட்டிருந்தன.

இவையும், முகாம் அமைப்பதற்கான பல்வேறு தளபாடங்களை அப் பகுதிகளில் படையினர் கொண்டு வந்து குவித்திருந்ததும் —

படையினர் தாம் கைப்பற்றிய பகுதிகளில் இராணுவ வேலித் தடை ஒன்றை ஸ்தாபித்து நிரந்தர முகாம்களை அமைக்கத் திட்டமிட்டிருந்ததை எடுத்துக் காட்டுபவையாக இருந்தன.

ஆனால் 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கையால், அது பலிக்[illegible] [illegible] வந்தபோது பின்வாங்கியிருப்பதாகக் கருதப்படுகின்றது. (உ)

## மருத்துவ மாதர் இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், தாதியர் பயிற்சிப்பாடசாலையில் மருத்துவ மாதர்களுக்குரிய பயிற்சி பெறும் தாதியர்களுக்குரிய இறுதிப் பரீட்சைகள் இம்மாதம் 26 ஆம் திகதி நடைபெற இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [இ]

# மரண அறிவித்தல்கள்

## சண்முகநாதன் கிருஷ்ணராசா
### போராளி - இசைவாணன்

காரைநகர் சக்கலாவோடையை பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது 53, சீனியர் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவருமான கிருஸ்ணராசா (போராளி - இசைவாணன்] 13 - 7 - 95 இல் சண்டிலிப்பாயில் வீரச்சாவடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற C. T. B சண்முகநாதன் கமலாதேவி தம்பதியினரின் அன்பு மகனும், ஆனந்தராசா [சுவிஸ்], பேரின்பநாதன் [ஜேர்மனி], இலட்சுமிகாந்தன் [லண்டன்], உதயகுமாரி [காரைநகர் இ. க. மாணவி], நவரட்ணராஜா [திருமாட்டி யாழ்ப்பாணம்], சற்குணராஜா, தயானந்தராஜா [மானிப்பாய் இ. க. மாணவன்] ஆகியோரின் அன்புச் சகோதரர் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15 - 7 - 95 இல் நடைபெற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. நவம்
[சகோதரன்]

[37569]

## சரவணமுத்து ஸ்ரீகிருஸ்ணகுமார்
[போராளி — மூத்தப்பன்]

சரவணமுத்து ஸ்ரீகிருஸ்ணகுமார் (போராளி - மூத்தப்பன்) வீரச்சாவடைந்துவிட்டார்.

இவர் மணிக்கும்பான் மேற்கு சரவணமுத்து (அருச்சுணன் - ஸ்ரீசாந்தி கபே, உரிமையாளர்)- சோதியம்மா தம்பதிகளின் அன்புமகனும், சாந்தி (சுவிஸ்), ஜெயந்தி, சந்திரகலா (ஜேர்மனி], வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீகந்தராஜா (சுவிஸ்], பாஸ்கரன் (ஜேர்மனி), சுரேந்திரநாதன் (ஜேர்மனி] ஆகியோரின் மைத்துனரும், சாளினி (சுவீஸ்), கார்த்திகைதீபன், சுகர்ணா (ஜேர்மனி), சுஜீவன் (ஜேர்மனி), ரஜீந்குமரன், டினேஸ்குமரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பூமணி தம்பதிகளின் பேரனுமாவார்.

அன்னாரின் வித்துடல் 15- 7- 95 மாலை கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டது என்பதை உற்றார். உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
அருச்சுணன்
(தந்தை]

50/33 செட்டித் தெரு
நல்லூர்

[37570)

## முத்தையா இரத்தினசிங்கம்
### (இரத்தினம்)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முத்தையா இரத்தினசிங்கம் 14 - 7 - 95இல் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான முத்தையா — தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரி (ஜேர்மனி), விநோதினி (கனடா), ஜயந்தினி (கனடா), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், யோசப் (ஜேர்மனி), தவக்குமார் (கனடா)ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலக்சன், டியானா, அஜந்தன், மஜீவன் ஆகியோரின் அன்புப்பேரனும், கந்தையா, கனகம்மா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், முருகையா, காலஞ்சென்ற இரத்தினசிங்கம், மற்றும் தவமணி, தனலக்ஷ்மி, பரமேஸ்வரி, செல்வராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-7-95) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு 'அன்பகம்', செம்பியன் லேன், கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இரத்தினேஸ்வரி
(மனைவி)

(37568)

## சீவரத்தினம் விஜயசிங்கம்
(இளவாலை வடக்கு)

சீவரத்தினம் விஜயசிங்கம் நேற்றுக்காலமானார். இவர் சீவரத்தினம் (மலாயன் பென்சனியர்) மகேஸ்வரி தம்பதியரின் ஏகபுத்திரனும், திருமதி சாரதாமணிதேவி, திருமதி இந்திராதேவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும்' அமரர் அருளானந்தன், திரு. மு. தேவதாசன் [சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்] ஆகியோரின் மைத்துனரும், செல்வி தே. தயாளினியின் (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவி) மாமனாரும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று [16-7-95] ஞாயிறு காலை 10 மணிக்கு வன்னியசிங்கம் வீதி தாவடி வடக்கு தாவடியில் உள்ள தற்போதைய தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திரு. மு. தேவதாசன்

[37566]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org